பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 19 திங்கட்கிழமை 01.04.2024 கதிர் 146

## விவசாயிகளைப் பாதுகாக்க அறிமுகமாகின்றது புதிய வரி

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில் புதிய வரி அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசேட பண்டங்கள் வரி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இரத்துச் செய்யப்படுவதுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்க உடனடியாக அறிமுகம் செய்யக்கூடிய வரியாக குறித்த விசேட வர்த்தக வரியை அறிமுகப்படுத்த முடியும்.

எவ்வாறாயினும், வரி அமுல்படுத்தப்படும் காலத்தில் நாட்டில் காணப்படும் பொருட்களுக்கு அதிக பெறுமதி வழங்கப்படுவதால், ☞ 2

## உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு

## இந்தியா நோக்கி திசை திருப்புவதன் அரசியல் சூழ்ச்சிப் பின்னணி என்ன?

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. கேள்வி

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களின் பின்னணியை இந்தியா நோக்கி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது திசைதிருப்புவதன் அரசியல் சூழ்ச்சி என்ன? இதன் மூலம் யாருக்கு வெள்ளையடிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா விசனம் வெளியிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சிதலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அது தொடர்பில் பிரபல ஆங்கில பத்திரிகையொன்றின் அரசியல் கட்டுரையில், மைத்திரி இந்தியாவிலுள்ள பிரபல இராஜதந்திரி ஒருவர் தொடர்பிலேயே தெரிவித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஆளும் தரப்பின் திட்டங்களில் ஒன்று சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் ஈர்ப்பதன் மூலம் டொலரில் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதுதான் அதன் நோக்கம். சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து டொலரைக் கறக்க வேண்டும் என்றால் மது போதை அதற்கான ஒரு வழிவகையாகப் பார்க்கப்படுகின்றது. அதற்காக மதுபான நிலையங்கள் திறக்கும் நேரத்தை அதிகரிப்பது உள்ளிட்ட பல நடவடிக்கைகளை ஆளும் தரப்பு எடுத்து வருகின்றது. அதன் இன்னொரு படியாக புதிய மதுபான நிலையங்களுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அல்லது ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு இயங்காது கிடந்த மதுபான நிலையங்களின் அனுமதிகள் புதியவர்களுக்கு வழங்கப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

ஒருபுறத்தில் போதைப் பொருள்களான கஞ்சா, ஹெரோயின், அபின், ஐஸ் போன்றவற்றைக் கடத்துபவர்களுக்கும் ☞ 2

## எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபமென இலங்கையில் செயற்படுகிறது இந்தியா

### விமல் வீரவன்ஸ பகிரங்கக் குற்றச்சாட்டு

**எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பது போன்று இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி சில நாடுகள் வளங்களை கையகப்படுத்தி வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

**கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் நேற்றையதினம் இலங்கையை மீட்டெடுப்பதற்கான முன்மொழிவுகளைக் கொண்ட திட்ட அறிமுக நிகழ்வில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்ததும்** ☞ 2

## பெற்றோல், டீசல் விலைகளில் மாற்றம் ஏதுமில்லை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று (31) நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தம் செய்துள்ளது. சாதாரண பெற்றோல், டீசல் விலைகளில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

அதற்கமைய, ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 440 ரூபாவாக அமைந்துள்ளது.

லங்கா சுப்பர் டீசலின் விலை 72 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 386 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீட்டரின் விலை 12 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதோடு புதிய விலை 245 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், ஒக்டேன் 92 ரக பெற்றோல் மற்றும் லங்கா ஒட்டோ டீசல் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானசார தேரர் சிறைக்குள் தள்ளப்பட்டுவிட்டார் அவரைப் பயன்படுத்தியோர் சுதந்திர நடமாட்டம்

### சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க

ஞானசார தேரருக்கு மேல் நீதிமன்றம் நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. ஞானசார தேரரை பயன்படுத்தி சிங்கள - முஸ்லிம்; இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்தவர்கள் இன்று சுதந்திரமாக உள்ளார்கள் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் இன்னும் உண்மை வெளிவரவில்லை. திட்டமிடப்பட்ட அரசியல் நாடகமாகவே இந்த குண்டுத் தாக்குதலை கருத வேண்டும். ஐந்து வருடகால சூழ்ச்சியின் ஊடாகவே கோட்டபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்ததற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு மேல் நீதிமன்றம் நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை ☞ 8

## தண்டனைச் சட்டங்களைத் திருத்தி குற்றத்தை அதிகரிப்பதே நோக்கம்

### ஆளும் தரப்பு மீது எதிர்க் கட்சித் தலைவர் பாய்ச்சல்

தண்டனைச் சட்டங்களை ஆளும் தரப்பு திருத்துவது குற்றங்களைக் குறைக்கவல்ல; அதிகரிப்பதற்கே. பெண்களின் பாலியல் வயதெல்லையைக் குறைக்கும் சட்டத் திருத்தத்தை ஆளும் தரப்பு மீளப் பெறாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஐக்கிய பெண்கள் சக்தியின் மாநாடு நேற்று பதுளையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஆளும் தரப்பு தண்டனைச் சட்டக்கோவையில் ☞ 2

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஜூலை இறுதியில் அறிவிப்பு

எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ. எல். ரத்நாயக்க இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 17 வரையான காலத்திற்குள் கட்டாயமாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும்.

2024 ஆம் ☞ 8

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கேட்டு கிறிஸ்தவர்கள் கல்முனையில் போராட்டம்



(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்கு நீதிகேட்டு கல்முனையில் கிறிஸ்தவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை எனவும் உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் இந்தப் போராட்டத்தின் போது வலியுறுத்தினர். உயிர்த்த ஞாயிறு தின ஆராதனையின் பின்னர் அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

போராட்டம் வண பிதா கிருபைராஜா தலைமையில் இடம்பெற்றது. எதிர்ப்புக் குரல் ☞ 2

## ஏஐ தொழில்நுட்பம் மூலம் திரைப்படம் உருவாக்குவதில் இலங்கை கவனம்

ஏஐ தொழில்நுட்பம் மூலம் திரைப்படங்களை உருவாக்குவதில் இலங்கை கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரீலா ஹோட்டலில் நேற்று இரவு நடைபெற்ற 20 ஆவது ரைகம் டெலிஸ் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

விற்பவர்களுக்கும் அவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கும்எதிராகத் தீவிரநடவடிக்கைஎடுக்கப்படுவதாகக் காட்டிக்கொள்ளும் ஆளும் தரப்பு மற்றொரு புறத்தில் மதுபானம் மூலமாக உள்நாட்டவர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் போதையேற்றுவதில்மும்முரமாகச் செயற்படுகின்றது. அதற்கான ஒரே காரணம்,போதைப்பொருள்கடத்தல் மூலம் கிடைக்கும் வருமானம் அரசுக்கு வராது மதுபானம் மூலம் கிடைக்கும் வருமானம் அரச திறைசேரியைச் சென்றடையும் என்பதுதான்.

இதற்காக ஆளும்தரப்பை இந்த இடத்தில் விமர்சிக்கும் நோக்கம் கொண்டதல்ல இந்தப்பதிவு, அரசின் இந்த மதுப் போதை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில்ஒருமதுபானநிலையம் புதிதாகத் தொடங்கப்படவுள்ளது. ஏற்கனவேஅந்தமாவட்டம்மதுபான நிலையங்களாலும் கசிப்பு உற்பத்தி மையங்களாலும் ஆடிப் போய்க் கிடக்கும்நிலையில்இப்போதுபுதிதாக மற்றொரு மதுபான நிலையமும் அங்கு அமையப் போகிறது. இந்த மதுபான நிலையத்தின் உரிமையைப்பெறுவதற்குஏகப்பட்ட அடிதடி, கிராக்கி. இதுவரையில் இந்த மதுபான சாலைக்காக 26 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கனகபுரம் பகுதியிலேயே புதிய மதுபானசாலைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய மதுபான சாலைகளுக்கான அனுமதிக்கு ஜனாதிபதியின் கீழ் உள்ள நிதி அமைச்சுக்கே விண் ணப்பிக்கவேண்டும். அவ்வாறு இதுவரையில்26விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே மதுபானசாலைகளை அல்லது சாராயக் கடைகளை வைத்திருக்கும் பலரும் இந்த புதிய மதுபானசாலைக்கு உரிமைகோரி விண்ணப்பித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லயாழ்ப்பாணத்தில் இயங்கும் காட்சி ஊடகம் ஒன்றின் உரிமையாளரும்கூட மதுபான நிலைய உரிமையைக் கேட்டு விண்ணப்பித்திருக்கிறாராம். எல்லோருக்கும் ஊற்றிக் கொடுத்தால் 'ஒற்றுமை சமரசம்' எல்லாம் இலகுவாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறாரோ என்னவோ. அவர் மட்டுமல்ல மற்றொரு ஊடக நிறுவனத்தின் உரிமையாளர் ஒருவரும் இதே மதுபானசாலையின் உரிமைக்காக விண்ணப்பித்திருக்கின்றார் என்கின்றனஅமைச்சுவட்டாரங்கள். சபாஷ் சரியான போட்டி. ஊருக்குத் தான் உபதேசம் எல்லாம்.

கிளிநொச்சியில் மட்டுமல்ல யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் புதிய மதுபானசாலைகளுக்கு அனு மதி வழங்கப்படவுள்ளது. அவற்றையும் பெறுவதற்கு இப்போ திருந்தே பலத்த போட்டி நிலவுகின்றதாம். ஒரு மதுபானசாலைக் கான அனுமதியைப் பெறுவதற்கு ஒரு சில கோடிகள் அல்ல பலப்பல கோடிகள் அரசுக்கே கட்டணமாகச்செலுத்தப்படவேண்டியுள்ளது. அதற்குப் புறம்பாக மேசைக்கு கீழாகவும் பல கோடிகளைக் கைமாற்ற வேண்டியிருக்குமாம். எதிர்காலச் சந்ததி விளங்கிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எரிகிற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில நாடுகள் கைகொடுக்க உடனடியாக விரைந்து வந்தன. அந்த நாடுகள் உதவிகளை அள்ளி வழங்கின. சரியாக கூறுவதாக இருந்தால் தீப்பிடித்து எரிகிற வீட்டில் தண்ணீரைக் கொண்டு வந்து அணைக்கும் செயற்பாட்டில்ஈடுபவடுவதுபோன்றே அவை செயற்பட்டன. ஆனால் தீ முழுமையாக அணைவதற்குள் அந்த வீட்டில் இருந்து தமக்குத் தேவையானவற்றை பெற்றுக்குள் கொள்ளும் நோக்கம் அவற்றுக்கு ஏற்பட்டுள்ளன.

தற்போது, அந்த நாடுகள் இலங்கையின் முக்கிய வளங்களை தம்வசப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன. இந்த நிலைமையானது எதிர்காலத்தில் இலங்கை சுயாதீனத்தினையும், இறையாண்மையையும் இழப்பதற்கே வழிவகுக்கும் என்றார்.

## ஏஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இருபது ஆண்டுகளில் தொலைக்காட்சித் துறையில் மிகப்பெரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. இன்று,கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகளால் தொலைக்காட்சி சவாலுக்கு உட்ப்டுள்ளது.

இன்று உலகம் நெட் பிளிக்ஸ், அமேசான் மூலம் முன்னேறி வருகிறது. இதனுடன் நாமும் முன்னோக்கிச் செல்லவேண்டும். மற்றைய நாடுகள் பல மொழிகளில் திரைப்படங்களைத்தயாரிக்கின்றன. கிரீஸ் போன்ற சிறிய நாடுகளிலும் அதனைக் காணலாம். நாமும் அது குறித்து அவதானம் செலுத்தவேண்டும்.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தை நவீனமயமாக்கி, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடக அபிவிருத்தி நிறுவனமாக மாற்றுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். அதற்கான அறிவை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம்.

தொலைக்காட்சி தொடங்கிய போது, ஜப்பானில் ஏராளமான மக்களுக்கு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அது அந்தக் காலத்தில் யசோராவய போன்ற புதிய தொலைக்காட்சி நாடகங்கள் உருவாக வழிவகுத்தது. மீண்டும் அதுபோன்முயற்சிகளைவிரைவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம்.

மேலும்,செயற்கைநுண்ணறிவு அல்லது ஏஐ தொழில்நுட்பம் கடந்த ஆண்டுமுதல்திரைப்படத்துறையில் இணைந்துள்ளது. தி பொரஸ்ட் (வீஜுளய்ஷலிவிமி) குறும்படம் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தத் திரைப்படத்தின் திரைக் கதையும் ஏஐ தொழில்நுட்பத்துடன் தயாராகி உள்ளது. மேலும் இந்தியாவில் மகராஜா இன் டெனிம்ஸ் (Maharaja in Denims) திரைப்படமும் ஏஐ மூலம் உருவாக்கப்படுகிறது. அதனை இலங்கைக்கும் கொண்டு வர வேண்டும்.

மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையின் முதலாவது ஏஐ திரைப்படத்தை தயாரிப்பதற்காக முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம். அதற்காக நியமித்துள்ள குழுவிற்கு நான் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். அதற்கான நிதியையும் ஆளும் தரப்புப் பெற்றுக்கொடுக்கும்.

இதன் மூலம் திரையுலகம் நாம் எதிர்பாராத பல மாற்றங்களை கண்டு வருகிறது. திரைப்படக் கூட்டுத்தாபனத்தை நவீனப்படுத்தி முதல் ஏஐ திரைப்படத்தை உருவாக்கி புதிய பயணத்தை தொடர அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.' என்றார்.

## இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனமையே இதற்கான காரணமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் இதுவரை இந்த தாக்குதல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளகருத்துக்களுக்கு என்னவானது? இதன் மூலம் யாருக்கு வெள்ளையடிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது? புதிதாக வெளிவரும் இந்த அரசியல் சூழ்ச்சியின் பின்னணி என்ன?

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இவ்வாறானதொருசெய்திவெளியிடப் பட்டுள்ளமையை, இரு நாடுகளுக் கிடையிலும் முரண்பாடுகளைத் தோற்விக்கும் செயலாகவே நாம் பார்க்கின்றோம். இதுவரை காலமும் விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு, மைத்திரிக்கு 100 மில்லியன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான செய்தி வெளியாகியுள்ளது.

எவ்வாறிருப்பினும் இன்னும் சில மாதங்களில் உருவாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பாதிக்கப்பட்டோருக்கு நிச்சயம் நீதி வழங்கப்படும் என்றார்.

### யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டியில்

# கார்த்திகைப் பூ இல்ல அலங்கரிப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணை



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் இல்ல அலங்காரங்களில் கார்த்திகைப் பூ மற்றும் தமிழ்ப் பெயருடனான போர் டாங்கி ஆகியவற்றின் வடிவமைப்புக் குறித்து பொலிஸார் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர்.

யாழ். மாவட்டம், வலி. வடக்கில் அமைந்துள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி சனிக்கிழமை இடம்பெற்றது. இல்ல அலங்காரங்களில் ஒரு இல்லம் கார்த்திகைப் பூவை தனது அலங்காரமாக வடிவமைத்திருந்தது. மற்றொரு இல்லம் டிக்ஸன் என்ற பெயரில் போர் டாங்கி ஒன்றைத் தனது அலங்காரமாக்கி இருந்தது.

அவை தொடர்பிலான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தீவிரமாகப் பரவின. இந்த இல்ல அலங்காரம் தொடர்பில் நேற்றைய தினம் விளையாட்டு போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையே பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்கள், பாதுகாப்பு தரப்பினர் பாடசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஒளிப்படங்கள், காணொளிகளை எடுத்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து இல்ல அலங்காரம் தொடர்பான விசாரணைக்காக நேற்றுப் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு பாடசாலை நிர்வாகத்திற்கு பொலிஸார் அழைப்புஅனுப்பியிருந்தனர். பாடசாலைஅதிபரிடமிருந்து பொலிஸாரால் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் கிளிநொச்சி மாவடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், இடம்பெற்ற விளையாட்டு போட்டியில் இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடை போட்டிகள் தொடர்பிலான படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி சர்ச்சைகள் ஏற்பட்டதை அடுத்து, வடமாகாண கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு , இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடை போட்டிகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தி இருந்தது.

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பி குறித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்று 5 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் நேற்று அதனை நினைவுகூர்ந்து நாடு முழுவதும் கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று விசேட திருபலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# மர்ஹூம் மயோன் முஸ்தபா ஞாபகார்த்த இப்தார் நிகழ்வு

## ஹக்கீம் உள்ளிட்டோர் பங்கேற்பு





(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் பிரதி அமைச்சரும் பிரபல சமூக சிந்தனையாளருமான மர்ஹூம் மயோன் முஸ்தபா ஞாபகார்த்தமாக அவர்களது புதல்வர்களான மயோன் குஷரூப் ஒப் கம்பெனி இன் தவிசாளரும் சமூக சேவையாளரும் எடுகேசன் அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா மற்றும் மயோன் நிறுவனத்தின் பணிப்பாளர் றம்லி முஸ்தபா ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்வு நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

பெருமளவான மக்களும் அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்குகொண்டிருந்த இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் அஷ் செய்க். எம்.ஐ.எம். ஆதம்பாவா (றஷாதி) மார்க்க சொற்பொழிவாற்றினார். அத்துடன் துஆ பிராத்தனையும் இடம்பெற்றது.

நிகழ்வின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான ஏ.எம்.ஜெமில், கே.எம். அப்துல் றஸ்ஸாக், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் றஹ்மத் மன்சூர், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. தாஹிர், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில் உள்ளிட்ட பிரமுகர்களுடன் உலமாக்கள் கல்விமான்கள், அதிபர்கள் எனப் பலரும் பங்குகொண்டிருந்தனர்.

நிகழ்வில் முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபா தொடர்பான நினைவலைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம் எடுத்துக் கூறினார். அவரது உரையில் மர்ஹூம் மயோன் முஸ்தபா கல்முனையை வடிவமைப்பதில் கொண்டிருந்த கரிசனையை எடுத்துக் கூறினார். இறுதியாக பாடசாலை அதிபர்களால் றிஸ்லி முஸ்தபாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌர விக்கும் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது. அத்துடன் றிஸ்லி முஸ்தபா அனைவருக்கும் நன்றிகூறி உரை யாற்றினார்.

(05)

# சாய்ந்தமருது உணவகங்களில் 2ஆவது தடவையும் சோதனை

## பாவனைக்கு பொருத்தமற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

(நூருல் ஹுதா உமர்)

புனித நோன்பு காலங்களில் சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவு பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் சனிக்கிழமை இரண்டாவது தடவையாகவும் சாய்ந்தமருது பிரதேச உணவகங்களுக்கு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டார்.

சனிக்கிழமை காலை உணவகங்களைப் பார்வையிட்ட அவர் உணவக உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவுகையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதன பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

அதனை ஒட்டியதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும், விநியோகம் செய்யும் உணவு நிலையங்கள் சனிக்கிழமை மாலை இரண்டாவது தடவையாக திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்களில் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் கைப்பற்றப்பட்டன.

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் அழிக்கப்பட்டன. அதே போன்று சில உணவகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

(05)

# யாழ். போதனா வைத்தியசாலையில் 10 மாடியில் புதிய கட்டடத் தொகுதி

## அனைவரது ஒத்துழைப்பையும் கேட்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 10 மாடியுடைய புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினமும் அதிகளவிலான நோயாளிகள் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை பெற்று வரும் நிலையில் விடுதிகளிலும் அதிகளவானோர் தாங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால், இட நெருக்கடி காரணமாக 10 மாடியில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்ட நிலையில் அடுத்த கூட்டத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கிறேன்.

புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு பெரும் நிதியைச் செலவு செய்யவேண்டிய சூழ்நிலையில் எமது புலம்பெயர் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் ஒரு தளத்துக்கான முழுமையான செலவை வழங்குவதற்கான சாதகமான பதிலை வழங்கியுள்ள நிலையில் அவரைப் போன்று பலர் உதவி வழங்குவார்கள்.

அரசிடம் புதிய கட்டடத்துக்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வரிவிலக்கைக் கோரி பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரே தடவையில் பத்து மாடிகளையும் கட்டி முடிக்காவிடினும் ஆகக் குறைந்தது ஐந்து தொடக்கம் ஆறு மாடிகளையாவது கட்டி முடித்தால் இட நெருக்கடி குறைந்துவிடும்.

ஆகவே, புதிய கட்டடத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார். (05)

# இலங்கை விவசாய பாடசாலை பட்டமளிப்பு மற்றும் கண்காட்சி



(தில்சாத் பர்வீஸ்)

இலங்கை விவசாய கல்லூரிகளில் ஒன்றான பாலமுனை விவசாய கல்லூரியின் 6 ஆவது பட்டமளிப்பு விழாவும் விவசாய கண்காட்சியும் சனிக்கிழமை பாலமுனை விவசாய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு கல்லூரியின் அதிபர் ஹரீஸ் தலைமையில் இடம்பெற்றது நிகழ்வின் பிரதம அதிதியாக ஆள மாலதி பரசுராமன் மற்றும் கல்லூரியின் விரிவுரையாளர்கள் கல்லூரியின் அபிவிருத்தி குழு தலைவர் சட்டத்தரணி அன்சில் அமீரி, பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் கற்கைநெறியை பூர்த்தி செய்த 2020ஃ2021 மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதம அதிதி மற்றும் அதிபரின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டதோடு காளான் உற்பத்தி கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது. 2023ஃ2024 டீயவஉா மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாய பயிற்சி கண்காட்சியை பார்வையிட்டதோடு மாணவர்களுக்கு மேலதிக ஆலோசனைகளும் பிரதம அதிதியினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது. (05)

# ஒரே தொடருந்தால் மோதப்பட்டு இரு வேறிடங்களில் இருவர் சாவு

*கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலால் இரு வேறிடங்களில் இருவர் மோதப்பட்டு உயிரிழந்துள்ளனர்.இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.*

*சனி காலை 8.45 மணியளவில், ராகமையிலுள்ள கடவை ஒன்று மூடப்பட்டிருந்தபோது, கடவையை கடக்க முற்பட்ட இளைஞரொருவர் ரயிலால் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்தவர் ராகமை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவராவார்.*

*இந்த விபத்தையடுத்து அந்த ரயில் மீண்டும் கொழும்பு கோட்டை நோக்கி அதன் பயணத்தைத் தொடர்ந்துள்ளது.*

*இந்நிலையில், ராகமை - துடுவேகெதர பகுதியில் வைத்து அதே ரயிலால மற்றுமொரு நபர் மோதப்பட்டு உயிரிழந்துள்ளார்.*

*இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தவர் 50 வயதுடைய நபர் என்பதுடன் அவர் தொடர்பான தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.* *(05)*

# வீடுடைத்துக் கொள்ளை சந்தேகநபர் கைது

## கல்கிஸ்ஸயில் சம்பவம்

*கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குறப்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து சொத்துக்களை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இந்தக் கொள்ளை சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.*

*கைது செய்யப்பட்டவர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவராவார்.*

*பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர், இரத்மலானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபரிடமிருந்து 11 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் ,கையடக்கத்தொலைபேசி , இயந்திரம் , சி.சி.ரி.வி கெமரா மற்றும் சிலிண்டர் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# செயற்கை நுண்ணறிவுக்கு சமாந்தரமாக சட்டதிட்டங்களை உருவாக்குதல் அவசியம்

அண்மைக்காலமாக அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்கை நுண்ணறிவுத் துறை தொடர்பில் அதீதமாகப் பேசி வருகின்றார். எந்தவொரு நிகழ்வுக்குச் சென்றாலும் ஏஐ எனப்படும் செயற்கைநுண்ணறிவை அதற்குள் இழுக்காமல் அவர் தனது பேச்சைக் கட்டமைத்ததில்லை. மீண்டும் மீண்டும் அது குறித்து வலியுறுத்தி வருகின்றார். நேற்றும்கூட திரைப்பட விருது வழங்கும் விழா ஒன்றிலும் அவர் ஆகப் பிந்தியதாக செயற்கை நுண்ணறிவு குறித்துப் பேசியிருக்கின்றார்.

"செயற்கை நுண்ணறிவு அல்லது ஏஐ தொழில்நுட்பம் கடந்த ஆண்டு முதல் திரைப்படத்துறையில் இணைந்துள்ளது. தி பொரஸ்ட் (The Frost) குறும்படம் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தத் திரைப்படத்தின் திரைக்கதையும் ஏஐ தொழில்நுட்பத்துடன் தயாராகி உள்ளது. மேலும் இந்தியாவில் மகராஜா இன் டெனிம்ஸ் (Maharaja in Denims) திரைப்படமும் ஏஐ மூலம் உருவாக்கப்படுகிறது. அதனை இலங்கைக்கும் கொண்டு வர வேண்டும்.


மொறட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையின் முதலாவது ஏஐ திரைப்படத்தை தயாரிப்பதற்காக முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம். அதற்காக நியமித்துள்ள குழுவிற்கு நான் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். அதற்கான நிதியையும் ஆளும் தரப்புப் பெற்றுக்கொடுக்கும்" என்று அரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும், தவிர்க்க முடியாத இந்த செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியினால் ஏற்படப்போகும் பாதிப்புக் குறித்து அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கையில் மட்டும் அரசுத் தலைவரே அதனை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்து அதற்கு ஆதரவான பரப்புரைகளை முன்னெடுப்பதிலும் குறியாக இருக்கின்றார். எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கும் –முன்னேற்றத்திற்கும் செயற்கை நுண்ணறிவு மிக அவசியம் என்று அவர் கருதக்கூடும். அது உண்மையாகவும் இருக்கலாம்.

எந்தவொ–ரு புதிய விடயமும் அறிமுகமாகும்போது நன்மைகளை மட்டுமல்லாது தீமைகளையும் சேர்த்தேதான் கொண்டுவருகின்றது என்பது பட்டறிவு. அதிலும் இந்த செயற்கை நுண்ணறிவு மூலம் பல மோசடிகளும் ஏமாற்றுக்களும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள். அதற்கான சில உதாரணங்கள் ஏற்கனவே உலகில் நிகழ்ந்தும் உள்ளன. செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியின் இந்தப் பாதகங்கள் குறித்தும் இலங்கை கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

செயற்கை நுண்ணறிவுத் துறையை ஊக்குவிக்கும் அரசுத் தலைவர், அதனால் ஏற்படப்போகும் பாதிப்புக்களையும் தீமைகளையும் கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டம் ஒழுக்கை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவேண்டும். செயற்கை நுண்ணறிவுத்துறையின் வளர்ச்சிக்குச் சமாந்தரமாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் நல்லவற்றுக்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்துவதற்குமா சட்ட வரையறைகளை அந்தந்த நாடுகளே உருவாக்கிக்கொள்ளவேண்டும், இது தொடர்பில் உலகப் பொதுக் கட்டுப்பாடுகள் உருவாக மாட்டா என்று துறைசார வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள். ஒவ்வொரு நாடுமே தனது கலாசார, விழுமியங்களுக்கு ஏற்ப இந்த விடயத்தைக் கையாள்வதற்கான சட்ட திட்டங்களை உருவாக்கவேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

செயற்கைநுண்ணறிவுத்துறைக்கான இலவசதூதுவராகச் செயற்பட்டுவரும் அரசுத்தலைவர், அந்தத் தொழில்நுட்பத்தை இலங்கைக்குள் வரவழைக்கும் அதேநேரத்தில் அது தொடர்பான சட்ட திட்டங்களையும் உருவாக்குவதில் அல்லது அந்தத் தொழில்நுட்பம் இலங்கைக்குள் அதிகமாக நுழைவதற்கு முன்பே அது தொடர்பான சட்டங்களை ஆக்குவதிலும் செயற்கை நுண்ணறிவுத்துறையை ஒழுங்குபடுத்தி நெறிமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் அதிகளவில் கவனம் செலுத்தவேண்டும்.



# மாஸ்கோ தாக்குதல் சூத்திரதாரிகள் யார்?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



மாஸ்கோவில் மார்ச் 22 நடந்த தாக்குதல்களுக்கு இஸ்லாமிய அரசு' எனப்படும் ஐஎஸ்ஐஎஸ்- கே (ஐளுஐளு- மு) உரிமை கோரியதாக மேற்கத்தய ஊடகங்களே அவசர அவசரமாகச் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஊடகங்களிலும், வலைத்தளங்களிலும் 'உரிமை கோரும்' பரப்பும் தகவல்களை காணக் கூடியதாக இருந்தது.

குறைந்தபட்சம் 140 பேரைக் கொன்ற படுகொலையில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடன் உக்ரைனுக்கும் தொடர்பிருப்பதாக ரஷ்யாவின் உளவுத்துறையான எவ்.எஸ்.பி. பாதுகாப்பு அமைப்பின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**பயங்கரவாத செயல்களுக்கு மேற்கத்திய நிதியுதவி:**

அதேவேளை, மாஸ்கோவில் தாக்குதலை நடத்தக்கூடும் என்று நம்புவது மிகவும் கடினம் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. பயங்கரவாத செயல்களுக்கு மேற்கத்திய நிதியுதவி குறித்து விசாரணை நடத்த ரஷ்ய நாடாளுமன்றம்



கோரியுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகளால் ரஷ்யாவிற்கு எதிராக அமைப்பு ரீதியான நிதியளித்தல் மற்றும் பயங்கரவாத செயல்களின் நடத்தையை முழுமையாக விசாரிக்க நாடாளுமன்றத்தின் கோரிக்கையை ஆய்வு செய்வதாக ரஷ்ய அரச புலனாய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வெள்ளியன்று மாஸ்கோவின் குரோகஸ் நகர மண்டபத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், ரஷ்ய அரசியல்வாதிகள் மற்றும் ஊடகப் பிரமுகர்கள் உக்ரேனிய மற்றும் மேற்கத்திய தலையீடு பற்றி ஊகித்துள்ளனர்.

**இஸ்லாமிய அரசு உரிமை கோரல் ?**

உடனடியாகவே மாஸ்கோ படுகொலை துப்பாக்கிச் சூட்டுக்கு இஸ்லாமிய அரசு பொறுப்பேற்றது. வாஷிங்டன் மற்றும் பாரிஸ் அரசுகள் தாக்குதலின் பின்னணியில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு இருப்பதை உறுதிப்படுத்தும் உளவுத்துறை தகவல் தங்களிடம் இருப்பதாகக் கூறியுள்ளன. பிரிட்டிஷ் வெளியுறவு செயலாளர் டேவிட் கேமஷரூன், குரோகஸ் சிட்டி ஹால் தாக்குதல் தொடர்பாக ரஷ்யாவின் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானவை எனத் தெரிவித்துள்ளார்.

எப்போதும் ரஷ்யாவின் உளவுத்துறை மிகவும் சக்திவாய்ந்ததாக அறியப்பட்டது. அப்படி இருக்கும்போது இந்த தாக்குதலை எப்படி முன்கூட்டியே கணிக்க முடியாமல் போனது என்று கேள்வியும் எழுந்திருக்கிறது.

சில ரஷ்யர்கள் கொடூரமான இந்த தாக்குதலுக்கு, ஐஎஸ்ஐஎஸ் உரிமை கோரினாலும் மந்தமான அரசின் பாதுகாப்பைக் குற்றஞ்சாட்டுகின்றனர். மார்ச் 22, 2024 ரஷ்யாவின் மாஸ்கோவின் குரோகஸ் சிட்டி ஹால் கச்சேரி அரங்கில் நிகழ்ந்த படுகொலை ரஷ்யாவின் நவீன வரலாற்றில் ஒரு இருண்ட வடிவத்தை உருவாக்கி உள்ளது.

**பிளாக் மெயில் என்று விவரிப்பு:**

ரஷ்ய உளவுத்துறை சேவைகள் மேற்கு நாடுகளிடமிருந்து மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகளைப் பெற்றன. மார்ச் 8 அன்று அமெரிக்காவில் இருந்து பொது எச்சரிக்கையாக, மாஸ்கோவில் பெரிய கூட்டங்களை குறிவைக்கவும், இசை நிகழ்ச்சிகளை உள்ளடக்கவும் தீவிரவாதிகள் உடனடித் திட்டங்களைக் கொண்டுள்ளனர் என்ற அறிக்கைகளை அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டது.

அதேவேளை இந்த மாதத் தொடக்கத்தில் மாஸ்கோவில் கச்சேரிகள் உட்பட பெரிய கூட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யாவிற்கு எச்சரிக்கை விடுத்ததாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூறியது. அந்த நேரத்தில்



கிரெம்ளின் அதை "பரப்புரை" என்றும் சமீபத்திய ரஷ்ய தேர்தலில் தலையிட வாஷிங்டனின் முயற்சி என்றும் நிராகரித்தது.

**உக்ரைன் நோக்கி விரல் நீட்டுகிறது:**

படுகொலை தாக்குதலை நடாத்திய சந்தேகத்திற்குரிய காரை, உக்ரைன் மற்றும் பெலாரஸ் எல்லையை ஒட்டிய மேற்கு பிரையன்ஸ்க் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை, ரஷ்ய போலீசார் தடுத்து நிறுத்தியதாக கூறினார். துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# மாஸ்கோ தாக்குதல் சூத்திரதாரிகள் யார்?......







அக் காரில் பிஸ்டல் மற்றும் வெடிமருந்துகளுடன் தாஜிக்கிஸ்தான் கடவுச்சீட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் கூறின. தாஜிகிஸ்தான் ஆப்கானிஸ்தானின் எல்லையாக உள்ளது.

மாஸ்கோ கச்சேரி அரங்கில் பயங்கர தாக்குதல் நடத்திய நான்கு துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் தெரிவித்துள்ளார். மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும், துப்பாக்கி ஏந்திய நான்கு பேரும் உக்ரைனுக்குச் சென்றபோது பிடிபட்டதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐஎஸ்ஐஎஸ் உரிமை கோரல் குறித்து ரஷ்யா அதிபர் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. தொலைக்காட்சி உரையில்,புட்டின் படுகொலையைக் கண்டித்துள்ளார். இருபது ஆண்டுகளாக ரஷ்யாவில் மிகவும் கொடிய ஒரு காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயல் என்றும், தாக்குதல் நடத்தியவர்கள் உக்ரைனுக்கு தப்பிச் செல்ல முயன்றனர் என்றும் புட்டின் கூறியுள்ளார்.

**பாகிஸ்தான் தலிபானால் உருவாக்கம்:**

முதலில் இந்த தாக்குதலை உரிமை கோரிய ஐஎஸ்ஐஎஸ் - கே 2015ஆம் ஆண்டில் பாகிஸ்தானிய தலிபானின் அதிருப்தி உறுப்பினர்களால் நிறுவப்பட்டது.

2021 ஆண்டு ஆப்கானிஸ்தான் ஆட்சியை தலிபான்கள் கவிழ்த்தவுடன், அமெரிக்க இராணுவம் வெளியேறியது. ஒகஸ்ட் 2021 இல் காபூலில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் ஐஎஸ்ஐஎஸ் - கே ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியது, அதில் 13 அமெரிக்கத் துருப்புக்கள் மற்றும் 170 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் ஐஎஸ்ஐஎஸ் - கே இன் சர்வதேச சுயவிவரத்தை உயர்த்தியது. இது தலிபானின் ஆளும் திறனுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக அமைந்தது. அப்போதிருந்து, தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஐஎஸ்ஐஎஸ் - கே க்கு எதிராக போர் தொடுத்து வருகின்றனர்.

**ரஷ்யாவை பழிவாங்க முயற்சி:**

மாஸ்கோவில் நடந்த தாக்குதலுக்கு இக்குழு பொறுப் பேற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐஎஸ்ஐஎஸ் - கே ரஷ்யாவில் தீவிரமாகச் செயற்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், செச்னியா மற்றும் சிரியாவில் மாஸ்கோவின் தலையீடுகளை எதிர்க்கும் வண்ணம், பழிவாங்கலாக இத்தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். - கே நடத்தியுள்ளது. அத்துடன் கிரெம்ளினின் கைகளில் முஸ்லிம்களின் குருதி இருப்பதாகக் குற்றஞ்சாட்டி, பழிவாங்கலாக இத்தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ் நடத்தியுள்ளது என மேற்குலக ஊடகங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பாதாள உலக குழுக்களை சேர்ந்த நால்வர் கைது

பாதாள உலக குற்றச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு உருவாக்கப்பட்ட விசேட 20 குழுக்களினால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் , மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவுகளைச் சேர்ந்த 20 விசேட குழுக்களாலே இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவினர்களால் களுத்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எலுவில மற்றும் மோதரை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 43 வயதுடையவர்களாவர். விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 1,590 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் தெமட்டகொடை பொலிஸ் பிரிவிற்குறப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு 9 பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவராவார்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் முல்லேரியா பொலிஸ் பிரிவிற்குறப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் முல்லேரியா பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவராவார்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகச் சந்தேகிக்கப்படும் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சோதனை நடவடிக்கைகளில் இதுவரையில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 206 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# நோன்பு பெருநாளை முன்னிட்டு புத்தளம் நகரில் மின் விளக்குகள்

(சியாஜ் )

*புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் இன் நிதி ஒதுக்கீட்டில் நோன்பு பெருநாளை முன்னிட்டு புத்தளம் நகர் , நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி நகர் பகுதிகளின் வீதி ஓரங்களும் வீதியும் மின் விளக்குகளால் பந்தல் அமைக்கப்பட்டு ஒளிரவிடப்பட உள்ளதுடன் ஒலிபெருக்கிகள் வீதிகளில் கட்டப்பட்டு இஸ்லாமிய கஸிதாக்களும் ஒலிக்கப்பட உள்ளது.*

*மேலும் நோன்பு பெருநாள் பிறை தென்படும் இரவு புத்தளம் கொழும்பு முகத்திடலில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் தலைமையில் வான வேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*

# சென்னை சவீதா சட்டக் கல்லூரியில் பேராசிரியர் முஸ்தபா தொடக்க உரை

(நவாஸ்)

சட்டத்தின் கண்ணோட்டத்தில் இலத்திரனில் நிதியியல் எனும் தொனிப்பொருளில் ஆய்வுக்கருத்தரங்கு அண்மையில் இந்தியாவின் சென்னை சவீதா சட்டக்கல்லூரியில் இடம்பெற்றது. இந்திய கல்வியியல் ஆராய்ச்சியாளர்கள் சங்கமும் இந்திய கணக்கியல் சங்கமும் இணைந்து சென்னை சவீதா சட்டக்கல்லூரியில் ஏற்பாடு செய்த 'சட்டத்தின் கண்ணோட்டத்தில் இலத்திரனில் நிதியியல்' எனும் தலைப்பில் இரண்டு நாள் ஆய்வுக்கருத்தரங்கு அன்மையில் இடம்பெற்றது.

இந்த ஆய்வுக்கருத்தரங்கின் தொடக்க உரையை இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வியாபார பொருளியல் துறை பேராசிரியரும், முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ துறைத் தலைவருமான பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மகாவலி ஆற்றில் குதித்த பெண் உயிருடன் மீட்பு

*மகாவலி ஆற்றில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற யுவதி ஒருவரை இளைஞர்கள் சிலர் இணைந்து காப்பாற்றிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.*

*இவ்வாறு காப்பாற்றப்பட்டவர் மினிப்பே பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியாவார்.*

*இவர் மஹியங்கனை – கண்டி வீதியில் மகாவலி ஆற்றிற்கு அருகில் உள்ள வெரகங்தொட்ட பாலத்திலிருந்து ஆற்றில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற போதே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.*

*சம்பவ இடத்திலிருந்த இளைஞர்கள் சிலர் இந்த யுவதி ஆற்றில் குதிக்கப் போவதைக் கண்டு அவரை தடுப்பதற்காக விரைந்த போது அவர் பாலத்திலிருந்து ஆற்றில் குதித்துள்ளார்.*

*இதனையடுத்து, அந்த இளைஞர்கள், ஆற்றில் குதித்த யுவதியை மீட்டு மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.*

*இந்த யுவதியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு வரவிருந்த அம்பியுலன்ஸ் சேவை 45 நிமிடங்கள் தாமதமானதால், யுவதியை ஓட்டோவில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.*

*பாலத்திற்கு அருகிலிருந்து இந்த யுவதியின் கையடக்கத் தொலைபேசி கிடைத்துள்ள நிலையில் பொலிஸார் யுவதியின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.*

*இந்த சம்பவம் தொடர்பில் ஹசலக பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)*




## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுக்கான புதிய வாக்காளர் பட்டியல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கே பயன்படுத்தப்படும். அது தொடர்பான வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

ஜுலை மாதத்தில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

## தண்டனைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களை மேற்கொள்கின்றது. அதன் மூலம் குற்றங்களைக் குறைப்பது நோக்கமல்ல. மாறாக குற்றங்களை அதிகரிப்பதே நோக்கமாகும். குறிப்பாக பாலியலுக்கு சம்மதம் தெரிவிக்கும் வயதைஆளும்தரப்பு16இல்இருந்து 14ஆக குறைக்கப்போகின்றது.

தண்டனைச்சட்டக்கோவையில் உள்ள பாலியல் தொடர்டபான விடயங்களை அர்த்தமற்றதாக மாறுவதற்கு ஆளும் தரப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தண்டனைச் சட்டக்கோவைத் திருத்தத்தின் மூலமாக பெண்களின் உரிமையை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாட்டில் ஆளும் தரப்பு ஈடுபடுகின்றது.

நான் ஆளும் தரப்பிடம்ம் பகிரங்கமான விடயமொன்றைக் கோருகின்றேன். நாளையதினம் (இன்று) நாடாளுமன்றம் கூடுகின்றது.உங்களுக்குமனச்சாட்சி இருந்தால் நாளையதினமே (இன்று) கேவலமான சட்ட திருத்தத்தினை மீளப்பெற்றுங்கள் அவ்வாறில்லையாயின் நாடாளுமன்றத்திற்குள்ளும், வீதியிலும் பெரும் ஆர்ப்பாட்டத்தினை நடத்துவதற்குநாம்தயாராகவேஉள்ளோம் என்றார்.

## ஞானசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதித்துள்ளது. ஞானசார தேரரை பயன்படுத்தி சிங்கள - முஸ்லிம்; இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத்தோற்றுவித்தவர்கள் இன்று சுதந்திரமாக உள்ளார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் திட்டமிட்ட வகையில் இன முரண்பாடுகள் உருவாக்கப்பட்டன. அதனை ஒரு தரப்பினர் தங்களின் குறுகியஅரசியல்தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு சற்று மீ;ண்டுள்ளது என்பதைஏற்றுக்கொள்ளவேண்டும். தற்போதைய முன்னேற்றம் நிலையானதாக அமைய வேண்டும். பொருளாதார மீட்சிக்காக ஆளும் தரப்பு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

வெளிநாட்டு அரசமுறை கடன்களை எதிர்வரும் ஜுலை மாதத்துக்குள் மறுசீரமைக்க வேண்டும். இல்லையேல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும். அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அல்லது ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித்தேர்தல்இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என பஸில் ராஜபக்ச குறிப்பிடுகிறார்.

நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டுக்காக பொதுத்தேர்தலை நடத்த கோருவதாக ராஜபக்சக்கள் குறிப்பிடுவதுமுற்றிலும்பொய்யானது. ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் படுதோல்வியடைவார்கள் என்பதை அவர்கள்நன்குஅறிவார்கள்.ஆகவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தலை நடத்தி, நாடாளுமன்றத்துக்கு சென்றுவிடலாம் என்று ராஜபக்சர்கள் முயற்சிக்கிறார்கள் என்றார்.

## விவசாயிகளைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கான நிவாரணம் கிடைக்காமல் போகலாம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்கும் முயற்சி நீதிமன்ற அவமதிப்பு

## கஜேந்திரன் எம்பி. முழக்கம்



( வி.ரி.சகாதேவராஜா)

நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான அதிகாரப் பயங்கரவாதம் நடத்துவது நீதிமன்றை அவமானப்படுத்தும் செயலாகும்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கல்முனையில் சுட்டிக்காட்டி இருந்தார்.

கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்திற்கு அம்பாறை மாவட்டச் செயலர் துணை போகின்றமை நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல் எனவும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்குவதற்கான செயற்பாட்டிற்கும் அம்பாறை மாவட்டச் செயலர் துணை போவதும் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்ற செயலென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மேலும் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரச்சினைகள் குறித்த போராட்டம் தொடர்ச்சியாக ஆறாவது நாளாக சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது



மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி தங்களது கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. கோடீஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், தமிழரசு கட்சியின் முன்னாள் வேட்பாளர் செல்வராசா கணேஷானந்தம் ஆகியோரும் பங்கேற்று இருந்தனர்.

அங்கு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் பேசுகையில் -

இதே போன்றதொரு போராட்டம் கடந்த காலங்களில் இடம்பெற்ற போது மூன்று நாளில் முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக உயர்த்தி தருவோம் என பல அரசியல்வாதிகள் வாக்குறுதி வழங்கியதும், ராஜபக்ஷ அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம் மற்றும் தற்போதைய ஜனாதிபதி முன்னாள் பிரதமராக இருந்த காலத்தில் முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாக உயர்த்தி தருவோம் என வாக்குறுதி வழங்கியிருந்தார். என்ன நடந்தது?

மேலும் கபினட் அதிகாரம் கிடைக்கப்பெற்ற பிரதேச செயலகத்தில் இயங்கிய இரண்டு கிராம சேவகப்பிரிவுகளை தெற்கு பிரதேச செயலகத்தில் அனுமதியின்றி இயங்கச் செய்திருப்பதும் மனித உரிமை மீறல் எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டி இருந்தார். (05)

# கிழக்கின் கேடயம் அமைப்பால் கடினபந்து பயிற்சிக் கூடாரம்

## அடிக்கல் நாட்டினார் எஸ்.எம். சபீஸ்



(நூருல் ஹுதா உமர்)

பாலமுனை இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அண்மையில் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைவாக கடினபந்து கிரிக்கெட் பயிற்சிக் கூடாரத்துக்கான அடிக்கல்லை நாட்டி அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். அடிக்கல்லை நட்டு வைத்து இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிய சபீஸ் -

எமது இளைஞர்கள் எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான போட்டிகளில் வாய்ப்புக்களை பெறவேண்டுமானால் எல்லா ஊர்களிலும் கடினபந்து கிரிக்கெட் விளையாடுவதற்காக தளங்களை உருவாக்க வேண்டும். பாடசாலைகள் மட்டத்திலான போட்டிகளை நடத்தி புதிய திறமையான வீரர்களை எமது பகுதிகளிலும் உருவாக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் சில வருடங்களிலாவது எமது பிராந்திய இளைஞர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்கும் வாய்புக்களை உருவாக்குவதற்கான சிறு முயற்சி மாத்திரமே இது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், கிழக்கின் கேடயம் பொருளாளர் ஏ.எல்.ருஸ்தி அஹ்மத், கிழக்கின் கேடயத்தின் இணைப்பாளர் சட்டக்கல்லூரி மாணவன் முஹம்மட் அசாம், ஏ.கே. அமீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், கிழக்கின் கேடயத்தின் ஆலோசகருமான சட்டமானி எஸ்.எம். எம். ஹனீபா, செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எம்.அர்சாத், அதிபர் எம்.எஸ். எம். றியாஸ், ஏ.எல். றமீஸ், இளைஞர் அமைப்பின் தலைவர் முஹம்மது சீத், மற்றும் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (05)

# போதை தலைக்கேறிய நபரால் கணவர், மனைவி மீது தாக்குதல்

## பெண் உயிரிழப்பு ஆண் காயம்

(எப்.முபாரக்)

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நபரொருவர் மது போதையில் கணவர் மற்றும் மனைவியை கோடாரியால் தாக்கியதில் மனைவி உயிரிழந்ததுடன் கணவன் பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். இக் கொடூர சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் அக்போபுர -85 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சிரோமாலா பெர்ணாந்து என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி பகுதியில் மதுபோதையில் சத்தம் போட்டுக் கொண்டிருந்த சந்தேகநபரை வீட்டுக்கு அருகில் உள்ளவர்கள் சத்தம் போட வேண்டாம் எனக் கூறியதையடுத்து கோபம் கொண்ட அவர் கணவன் மற்றும் மனைவியை கோடாரியால் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த இருவரும் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மனைவி உயிரிழந்ததுடன் கணவன் பலத்த வெட்டுக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கோடாரியால் தாக்கியதாக கூறப்படும் அதே பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஏ.டபிள்யூ.எம்.விக்ரமசிங்க என்ற சந்தேகநபரை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

# பொத்துவிலில் இப்தார் நிகழ்வு

(கே எ ஹமீட்)

பொத்துவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி பைசல் முகைதீனின் தலைமையில் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் எம்.எஸ் .உதுமாலெப்பை, பொத்துவில் அமைப்பாளரும், முன்னாள் பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான கலாநிதி எம் .எஸ் .ஏ. வாசித் இன்னும் பலர் கலந்து கொண்டனர .(05)



காலைக்கதிர் Kalaikkathir

# 15 கோடி ரூபா பெறுமதியான கோதுமை மா மூடைகள் கனேவல்பொல பிரதேச களஞ்சியத்திலிருந்து சிக்கின

## மனித பாவனைக்குதவாதவை





கனேவல்பொல பிரதேசத்திலுள்ள பெரிய களஞ்சியசாலை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 15 கோடி ரூபா பெறுமதியுடைய மனித பாவனைக்குதவாத 10 ஆயிரம் கோதுமை மா மூடைகளை கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

மனித பாவனைக்கு உதவாத காலாவதியான கோதுமை மா மூடைகள் சந்தையில் விற்பனைசெய்வதற்கு தயாராக வைக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, கனேவல்பொல பிரதேசத்தில் உள்ள பெரிய களஞ்சியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 25 மற்றும் 50 கிலோ நிறையுடைய மூடைகளில் மனிதபாவனைக்குதவாத கோதுமைமா கைப்பற்றப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிளகுகளை உலர்த்தி பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் பெரிய களஞ்சியசாலை ஒன்றிலேயே இந்த மனிதபாவனைக்கு உதவாத கோதுமை மா மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கோதுமை மா காலாவதியாகியுள்ளதாகவும் அவை வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை எனவும் குறித்த கோதுமை மாவில் காணப்பட்ட பூச்சிகளை விரட்ட கிருமிநாசினி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த கோதுமை மாவில் விஷம் கலந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதுடன், காலாவதி திகதியை மாற்றி புதிய பொதிகளில் அவற்றை பொதி செய்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவெனத் தெரிவித்து விற்பனை செய்ய முற்பட்டமை சுகாதார வைத்திய அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் இருந்து தெரியவந்துளது. (05)

## 'யுக்திய' சுற்றிவளைப்புக்களில் 13 பெண்கள் உட்பட 798 பேர் கைது

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 13 பெண்கள் உட்பட 798 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள், 43 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு , 14 சந்தேக நபர்களின் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் போதைப்பொருளுக்கு அடிமையான 11 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 510 சோதனை நடவடிக்கைகளில் 6 பெண்கள் உட்பட 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 182 கிராம் ஹெரோயின், 148 கிராம் ஐஸ் , 307 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 66 சோதனை நடவடிக்கைகளில் பெண் உட்பட 65 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 30 கிராம் ஹெரோயின் மற்றும் 302 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

## தில்லையடி அல்ஜித்தா பாலத்தின் வேலை முடிவடையும் தருவாயில்

(சியாஜ்)

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் முன்மொழிவுக்கமைய கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அல்ஜித்தா பாலத்தின் புனர்நிர்மானம்

உலகில் திடீரென ஏற்பட்ட கொரோனா முடக்கம் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த பாலத்தின் வேலைகள் தாமதமடைந்தது.

இருப்பினும் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மீண்டும் இந்த பாலத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தற்போது மேற்படி பாலத்தின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளதை நேரில் சென்று புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பார்வையிட்டார். இதன்போது முன்னாள் புத்தளம் நகர சபை உறுப்பினர் நகுலேஸ்வரன், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் இணைப்பாளர்களான எச். அமீர் அலி ஆசிரியர் மற்றும் நிஷாத் ஆகியோரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

## பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பில் 6 சந்தேகநபர்கள் கைது

கடந்த சில வருடங்களாக கிளிநொச்சி, முல்லத்தீவு, வவுனியா போன்ற பகுதிகளில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஆறு பேர் அக்கரையான் பொலிஸாரின் விசாரணைகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பல பகுதிகளில் தங்க நகைகளை கொள்ளையிட்டு வந்தவை விசாரணைகளின் மூலம் தெரியவந்ததுடன் இந்த விசாரணைகளின் மூலம் ஒரு பகுதி தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக சந்தேக நபர்களிடம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அக்கரையான் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி மற்றும் வவுனியா பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (05 - 113)







## தந்தை செல்வநாயகத்தின் 126 ஆவது பிறந்த நாள்

(ஹஸ்பர் ஏ. எச்)

'ஈழத்துக் காந்தி,' என அழைக்கப் படும் தந்தை செல்வா அவர்களின் 126 ஆவது பிறந்த நாளை ஒட்டி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சி திருக்கோணமலை மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன், செயலாளர் கந்தசாமி செல்வராசா மாவட்டக் கிளை உறுப்பினர் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர் என பலரும் கலந்து கொண்டனர். (05)

## காரைதீவு வி.கழகம்சம்பியனாக தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)


காரைதீவு பிரதேச செயலகம் வருடாந்தம் நடத்தி வரும் பிரதேசமட்ட விளையாட்டுப்போட்டியில் இவ்வாண்டுக்கான ஒட்டுமொத்த சம்பியனாக காரைதீவு விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது. அக் கழகம் 20 தங்கப் பதக்கங்களையும், 16 வெள்ளிப் பதக்கங்களையும், 16 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாம்பியனாக தெரிவாகி சாதனை படைத்தது. இரண்டாம் இடத்தை ஜொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகமும் மூன்றாவது இடத்தை விவேகானந்தா விளையாட்டு கழகமும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டிகள் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற்றன.

சாம்பியனாக சாதனை படைத்தமைக்காக தமது கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் வி.வி.ஜயசாந்தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# தந்தை செல்வாவின் 126ஆவது பிறந்த தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது






யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெற்றது. தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வடக்கு மாகாண அவளத் தலைவர் சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# மௌலவி இப்றாகீம் மறைவினால் முஸ்லிகளிடம் பெரும் அதிர்வலை

## கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை அனுதாபம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக சன்மார்க்கப் பணி, சமூகப் பணி, தீர்க்க தரிசனமிக்க கல்விப் பணி ஆற்றி பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ள பல்கலைக்கழக முன்னாள் ஆசான், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஆரம்ப காலத் தலைவர், பல இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் ஸ்தாபகர் மௌலவி ஏ.எல். எம். இப்றாஹீமின் மரணச் செய்தி இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதாக கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவை தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளது.

பேரவையின் தலைவர் பேராசிரியர் மௌலவி ஜலால்தீன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மௌலவி இப்றாஹீம், இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆற்றிய பணிகள் மிகவும் தீர்க்க தரிசனமிக்க பணிகள் மட்டுமன்றி, இச் சமூகத்தின் எதிர்கால நலனையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர், குறிப்பாக கடந்த அரை நூற்றாண்டுகாலம் முஸ்லிம் சமூகம் எதிர் கொண்ட பல்வேறு சவால்களுக்கு எதிர் நீச்சலாக மௌலவி இப்றாஹீமின் பல்வேறு திட்டங்கள் அமைந்துள்ளன என்பது அது பற்றிய ஆய்வை மேற்கொள்வோர் கண்டு கொள்ள முடியும்.

குறிப்பாக, பெண்களுக்கான கல்வி நவீன மயப்படுத்தியமை, ஆங்கிலம், நவீன தொழில் நுட்பம் உடையதாக அதை மாற்றியமை, முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கை நாட்டின் பெரும்பான்மை சமூகத்தின் மொழியான சிங்கள மொழியில் பரீட்சயம் கொண்ட மார்க்க அறிஞர்களை உருவாக்கியமை இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதற்கான திட்டங்கள், முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கிய பல்வேறு காலகட்ட இனக் கலவரங்களில் இருந்து மீள்வதற்கான வழிகள், முஸ்லிம்களின் பெருமதிப்பிற்குரிய உலமாக்களின் சபையான அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையை மிகவும் ஆளுமையும், ஆற்றலும் கொண்டதாக மாற்றுதல் என பல பரிமாணங்களை கொண்டதாக மௌலவி இப்றாஹீமின் திட்டங்கள் அமைந்திருந்தன.

தனது 82 வயதைக் கடந்த முதுமையில் இருந்த அவரை நலம் விசாரிக்க சென்ற வருடம் அவரின் இல்லத்துக்கு நான் சென்ற போது, அவரின் நினைவு ஆற்றலில் சில குழப்பங்கள் இருப்பதை அவதானித்தேன்.

அந்த நிலைமையில் கூட அவரது கேள்விகளும், சிந்தனைகளும் சமூகத்தின் நிலைமை பற்றிய கவலைகள் கொண்டவையாகவே இருந்ததை அப்போது என்னால் அவதானிக்க முடிந்தது.

தனது பல்கலைக்கழக ஆசிரியப் பணியில் பல ஆற்றலும், அறிவும் கொண்ட புத்திஜீவிகளின் உருவாக்கத்தில் மௌலவி இப்றாஹீமின் பங்களிப்பு என்றும் நினைவு கூரப்படவேண்டியவையாகும்.

யா அல்லாஹ்! அன்னாரின் பிழைகளை மன்னித்து மறுமை வாழ்க்கையை ஈடேற்றம் உடையதாக ஆக்குவாயாக! ஆமீன். - என்றுள்ளது. (05)

# கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கத்தாரிலுள்ள இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மலபார் கோல்ட் டைமோனட் நிறுவனத்தின் முழு ஆதரவுடன் கத்தார் நாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கான வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் புனித இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வு சனிக்கிழமை இடம் பெற்றது.

இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் அஹமத் றிசாத் தலைமையில் கத்தார் நியூ ஸலாத்தா அல்-அரபி விளையாட்டு அரங்கில் இந்த வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் கத்தார் உள்துறை அமைச்சின் பிரதிநிதி பைசல் அல்-ஹுதாவி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றனர். இவ் இப்தார் நிகழ்வில் அதிகளவிலான இலங்கையர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் ம.வி. வருடாந்த இப்தார் நிகழ்வு சனியன்று



கல்முனை கல்வி வலய இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் மார்க்க சொற்பொழிவை அல்ஹாபிழ் மௌலவி முஹம்மட் கியாஸ் நிகழ்த்தியதுடன் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் புனித ரமழான் சிந்தனையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிமனை நிர்வாக பிரதி கல்வி பணிப்பாளர் எம். எச். ஜாபீர், கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எம். ரம்சீன் பக்கீர், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி யூ.எல்.எம். றியால், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், கல்முனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ.ஏ.கபூர், கல்முனை கல்வி வலய அதிபர் சங்க தலைவர் இஸட் அஹமட், வர்த்தக பிரமுகர்கள், தொழிலதிபர்கள், தனவந்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2024இல் வெளியிடப்பெற்றது